# தூதன்

May-June 2017

THE MESSAGE



மஸ்ஜிதுல் அக்ஸா - காதியான்

ஆசிரியர்: A அப்துல் அஸீஸ்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வெளியீடு

# அஹ்மதிய்யா கிலா:.பத்

(1908 ம் ஆண்டு மே மாதம் 27 ம் திகதி
அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஸ்தாபகர்
ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களின்
மறைவுக்குப் பின்னர் இறை வாக்குறுதியின் அடிப்படையில்
அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலா:.பத் எனும் ஆன்மீகத்
தலைமைத்துவம் நிருவப்பட்டது)




ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் (அலை) (1835-1908)




முதலாவது கலீ:.பதுல் மஸீஹ் ஹஸ்ரத் மவ்லானா ஹகீம் நூருத்தீன் (ரழி) (1908-1914)



இரண்டாவது கலீ:.பதுல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரழி) (1914-1965)



மூன்றாவது கலீ:.பதுல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹ்) (1965-1983)



நான்காவது கலீ:.பதுல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (ரஹ்) (1983 - 2003)



அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய உலகளாவியத் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அ.பி.அ) அவர்கள்

*Tamil Magazine dedicated to Islam – Ahmadiyyath.*

# தூதன்- THE MESSAGE

## உள்ளே....

1. திருக்குர்ஆனிலிருந்து.....
2. நபிமொழியிலிருந்து.....
3. இமாம் மஹ்தி (அலை) அவர்களின் கூற்றுக்களிலிருந்து.....
4. சிலுவையில் மரணம்.
5. மேலும் பல அம்சங்கள்....

Published by: Ahmadiyya Muslim Jama'at – Sri Lanka.

Contact details: Baithul Hamd
619/4, Baseline Road,
Colombo.9

Telephone: 0094 11 2687568.

Hotline: 0094 777 753440.

Email: editorthoothanlk@gmail.com

Website: www.alislam.org

# நபி வழி

***திருக்குர்ஆனிலிருந்து...***

'அளவற்ற அருளாள(னாகிய இறைவ)னின் (உண்மையான) அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பவராவர். அறிவற்றவர்கள் அவர்களுடன் (அறிவீனமாகப்) பேசினால் அவர்கள் சாந்தி எனக் கூறி (சென்று) விடுவார்கள்.'(25:64)

'நீ மனிதர்களிடம் உன் கன்னத்தை கர்வத்தால் பொங்கச் செய்யாதே, பூமியில் ஆணவங் கொண்டு நடக்காதே, நிச்சயமாக கர்வங்கொண்டவன், பெருமையடிப்பவன் எவனையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.' (31:19)

'உன் நடையில் நடு நிலையைப் பேணுவாயாக. மேலும் உன் குரலைத் தாழ்த்திக் கொள்வாயாக. (ஏனெனில்) நிச்சயமாக குரல்களுள் மிகவும் வெறுக்கத்தக்கது கழுதையின் குரலாகும்.' (31:20)

***நபிமொழியிலிருந்து....***

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'மூன்று விஷயங்கள் ஒவ்வொரு பாவத்தின் வேர் ஆகும். அவற்றிலிருந்து தப்பித்திருக்க வேண்டும். 1. ஆணவத்திலிருந்து தப்பித்திருங்கள். ஏனெனில் அது தான் ஆதமிற்கு சஜதா செய்யாமலிருக்க தூண்டியது. 2. பேராசையிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பேராசை தான் ஆதமை விலக்கப்பட்ட கனியை உண்ணத் தூண்டியது. 3. பொறாமையிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பொறாமையினால் தான் ஆதமின் இரு மகன்களில் ஒருவர் தன் சகோதரரை கொலை செய்து விட்டார்.' (புகாரி, முஸ்லிம்)

***ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து ....***

'ஆணவம் மிகவும் பயங்கரமான நோயாகும். இது எந்த மனிதரிடம் உருவாகி விடுகின்றதோ அவருக்கு அது ஆன்மீக மரணமாகும். இந்த நோய் கொலையை விடக் கொடியது என நான் உறுதி கொள்கிறேன். ஆணவம் கொண்டவர் ஷைத்தானின் சகோதரன் ஆகிவிடுகின்றார். ஏனெனில் ஆணவம் தான் ஷைத்தானை இழிவு படுத்தியது. எனவே நம்பிக்கை கொண்டவருக்கான நிபந்தனை, அவரிடம் ஆணவம் இருக்கக் கூடாது. மாறாக பணிவு, அடக்கம், எளிமை அவரிடம் காணப்பட வேண்டும். மேலும் இவை இறைவனால் நியமிக்கப்பட்டவரின் சிறப்புப் பண்பாகும். அவர்களிடம் அதிகமான பணிவும், அடக்கமும் காணப்படுகின்றது. மேலும் அனைவரையும் விட அதிகமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இந்தப்

பண்பு காணப்பட்டது. அனனாரின் ஓர் ஊழியரிடம், 'ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உம்முடன் எப்படி நடந்து கொண்டார்கள் என்று கேட்கப்பட்ட போது, என்னை விட அவர்கள் எனக்கு அதிகமாகத் தொண்டு செய்கின்றார்கள் என்பது தான் உண்மை' எனக் கூறினார். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் வபாரிக் வஸல்லிம். (மல்.'.பூஸாத் தொகுதி 4 பக்கம் 437)

## இமாம் மஹ்தியின் இனிய போதனைகளிலிருந்து.....

'மனைவிக்குத் துரோகம் செய்யும் கணவனும் கணவனுக்குத் துரோகம் செய்யும் மனைவியும் என் ஜமாஅத்தைச் சார்ந்தவரல்ல. பைஅத் செய்யும் போது செய்த வாக்குறுதிகளை முறிப்பவரும் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவராக மாட்டார். எவர் என்னை வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் என்று உளப்பூர்வமாக நம்பவில்லையோ அவரும் என் ஜமாஅத்தைச் சார்ந்தவரல்ல.

நல்ல காரியங்களில் என்னைப் பின்பற்றத் தயாராக இல்லாதவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவராக மாட்டார். எவர் எதிரிகளின் கூட்டத்தில் போய் உட்கார்ந்து கொண்டு அவர்களின் கூற்றுக்களுக்கு ஆமாம் போடுகின்றார்களோ அவரும் என் ஜமாஅத்தைச் சார்ந்தவராக மாட்டார். விபச்சாரியும், கெட்ட நடத்தை உள்ளவரும், பஞ்சமா பாதகங்களில் ஈடுபடுகின்றவரும், நம்பிக்கைத் துரோகம் செய்கின்றவரும், இலஞ்சம் வாங்குகின்றவரும், அநியாயக்காரும், அக்கிரமக்காரரும், புறம்பேசுகின்றவரும், பொய்யரும், ஏமாற்றுக்காரரும், இத்தகையவர்களோடு கூட்டுசேர்ந்தவர்களும் தம்முடைய சகோதரர்கள் மீதும் சகோதரிகள் மீதும் அவதூறுகளைச் சுமத்துகின்றவரும், தம்முடைய பாவச் செயல்களை விட்டு பாவமன்னிப்புக் கேட்காதவரும், கெட்ட நண்பர்களை விட்டு விடாதவரும் என் ஜமாஅத்தைச் சார்ந்தவராக மாட்டார். இவ்வனைத்தும் கொடிய விஷங்களாகும். இவ்விஷங்களை நீங்கள் அருந்தினால் அவற்றிலிருந்து எளிதில் உங்களால் மீள முடியாது.'

# சிலுவையில் மரணம்

**இயேசுவின் பிறப்பு**

இயேசு யூதர்களுக்கிடையில் அவதரித்திருந்த போதிலும் உலகிலுள்ள மூன்று பெரிய மார்க்கங்களான யூத, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் ஆகியவற்றுக்கிடையில் இயேசுவின் பிறப்பு மற்றும் மரணம் குறித்து வியக்கத்தக்க வேற்றுமைகள் நிலவுகின்றன. யூதர்கள் இயேசுவின் பிறப்பை முறையற்றது எனக் கூறி அவரது தாயார் மேரியின் மீது வீண்பழி சுமத்தியதால் குற்றவாளியானார்கள். அவர் நெறிதவறிப் பிறந்தவர் என்ற காரணத்தால் நல்லவர்களின் சபையில் நுழையத் தகுதியற்றவர் எனப் பிரகடனப்படுத்தினார்கள். (இறைவன் மன்னிப்பானாக!)

ஆனால் கிறிஸ்தவர்களோ இயேசு தந்தையின்றி பிறந்தார். மேலும் அவர் தேவகுமாரன் என்று நம்புகின்றனர். இதிலிருந்து இயேசுவின் பிறப்பைப் பொருத்தவரையில் யூதர்களும், கிறிஸ்தவர்களும் ஒன்றுக்கொன்று எதிரான கொள்கைகளைக் கொண்டிருக்கின்றனர் எனத் தெரிய வருகின்றது.

முஸ்லிம்களோ, இயேசு தந்தையின்றிப் பிறந்தார். எனினும் தேவகுமாரன் இல்லை என்று ஒப்புக் கொள்கின்றனர். தந்தையின்றிப் பிறத்தல் என்பது வினோதமாகத் தோன்றலாம். ஆனால் அது இயற்கைக்கு அப்பாற்பட்டதல்ல. மருத்துவ உலகில் பரிசுத்தமான கண்ணிப் பெண்களுக்கும் குழந்தை பிறந்துள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. தற்கால மனித குலத்தின் முதல் தந்தையான ஆதம், தந்தையும் தாயும் இன்றிப் பிறந்தவர் என முக்கிய மூன்று மார்க்கங்களும் ஏற்றுக் கொள்கின்றன.

முஸ்லிம்கள் இயேசு ஒரு உண்மையான இறைத்தூதர் என்று நம்புகின்றனர். மனிதத் தொடர்பின்றி பிறந்ததால் தேவகுமாரன் அல்லது தேவசாயல் கொண்டவர் என்று கூறப்படுவதற்கு எவ்வித ஆதாரமும். இல்லை. அவர் மனிதராக, தூய்மை, எளிமை மிக்கவராகத் திகழ்ந்தார். இயேசு புதிய ஏற்பாட்டில் தன்னைப் பற்றி பல இடங்களில் மனித குமாரன் என்றே கூறியுள்ளார்.

**இயேசுவின் மரணம்**

இயேசுவின் மரணம் குறித்தும் யூத, கிறிஸ்தவ, முஸ்லிம் மார்க்கங்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. யூதர்களின்

நம்பிக்கை யாதெனில், இயேசு பொய் தீர்க்கதரிசியாக இருந்ததால் சிலுவையில் மரித்தார். இதற்கு ஆதாரமாக அவர்கள் வேதாகமத்திலிருந்து தரும் ஆதாரம்:

'கொலை செய்யப்பட்ட ஒருவன் மேல் சாவுக்குப் பாத்திரமான பாவம் உண்டாயிருக்க, அவனைக் கொலை செய்யும்படி மரத்திலே தூக்கிப் போடுவாயானால்.... தூக்கிப் போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்.' (உபாகமம் : *21: 22-23*)

யூதர்களின் கருத்துப்படி இயேசு கல்லத் தீர்க்கதரிசி. அதனால் இறை சாபத்திற்கு உள்ளாகி சிலுவையில் மரித்தார். கிறிஸ்தவர்களும் இயேசு சிலுவையில் அறையப்பட்டு சபிக்கப்பட்ட மரணத்தை அடைந்தார் என்றே நம்புகின்றனர்.

**பவுல் கூறுகிறார்:**

'மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்களாக்கி மீட்டுக் கொண்டார்.' (கலாத்தியர் : *3: 13*)

ஆனால் திருக்குர்ஆன் கூறுவதாவது: இயேசு சிலுவையில் மரணிக்கவில்லை. இறைவன் அவனது நல்லடியார்களை அவர்களின் துயர வேளையில் காப்பாற்றுவது போன்று இயேசுவையும் காப்பாற்றினான்.

யோனா தீர்க்கதரிசி திமிங்கிலத்தின் வயிற்றிலிருந்து உயிருடன் காப்பாற்றப்படவில்லையா? உண்மை யாதெனில் இயேசு சிலுவையில் மயக்க நிலையில் இருந்தார். அதிலிருந்து கீழிறக்கப்பட்ட போது அவர் குணமடைந்தார். அதன் பின் அவர் தனது 120 ஆவது முதிர்ந்த வயதில் இயற்கை மரணமடைந்தார்.

இயேசு கள்ளத் தீர்க்கதரிசி என்ற யூதர்களின் உறுதியான நம்பிக்கையின் காரணமாக யூத மதத் தலைவர்கள் அவர் மீது அரசியல் குற்றச்சாட்டைக் கொண்டு வந்தனர். ரோமானிய சக்கரவர்த்திக்கு அவர் நம்பிக்கைத் துரோகம் செய்தார் என்றும் குற்றம் சாட்டினர். ஆளுநர் பிலாத்து அவர் மீதுள்ள குற்றச்சாட்டை ஏற்க மறுத்தாலும் மற்றவர்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாக அவர் சிலுவையில் இயேசுவை அறைய உத்தரவிட்டார். அவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்து அவர் அதில் தொங்கி இருந்த நேரம் 3 அல்லது

4 மணிநேரம் மட்டுமே. பின்னர் அதிலிருந்து இறக்கப்பட்ட போது அவர் ஆழ்ந்த மயக்க நிலையில் இருந்தார். அவரை அவர்கள் அருகில் இருந்த தோட்டத்தில் அமைந்திருந்த ஒரு விசாலமான கல்லறையில் வைத்தனர்.

அக்காலத்தில் சிலுவை நிகழ்ச்சியின் போது குற்றவாளிகள் சிலுவையில் அறையப்பட்டு மரணமடைய பல நாட்கள் ஆகும். அவர்கள் கொடும் பசியாலும், நீடித்த தாகத்தாலும் கடுமையான வேதனைக்கு உள்ளானார்கள். பெரும்பாலும் அவர்களது கால்கள் முறிக்கப்படும். அவர்களது மரணம், தாமதித்த நீடித்த மரணமாக பல நாட்களுக்கு இருக்கும். ஆனாலும் இயேசுவுக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்படவில்லை. அவர் ஒரு வெள்ளிக்கிழமை பிற்பகலில் சிலுவையில் அறையப்பட்டார். அடுத்த நாள் சபத் நாள், யூதர்களுக்கு ஒரு மார்க்கக் கொண்டாட்ட நாளாக இருந்தது. அந்தப் புனித நாளில் எந்தக் குற்றவாளியும் சிலுவையில் அறையப்பட்டிருக்கலாகாது என்ற முறையில் அவர் சிலுவையிலிருந்து 3 அல்லது 4 மணி நேரத்திற்குள் கீழே இறக்கப்பட்டார். அவரது காயங்களினால் உண்டான இரத்த இழப்பின் காரணமாக அவர் மயக்க நிலைக்குத் தள்ளப்பட்டார். அவர் இறந்தவராகக் கருதப்பட்டார். அவரது உடல், அவரது சொந்த சீடரான அரிமெத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பினால் கல்லறை தோட்டத்தில் வைக்கப்பட்டது. கல்லறையில் உயிருடன் இருந்த இயேசு, மூன்றாவது நாள் மாறு வேடத்தில் வெளியேறி தன் சீடர்களை கலிலேயாவில் சந்தித்து அவர்களுடன் உணவருந்தினார். அவரது சீடர்கள் பிரத்தியேகமாக தயாரித்த களிம்பை தடவியதால் அவரது காயங்கள் குணமடைந்தன.

இதுவே இயேசு சிலுவையில் அறையப்பட்டதன் உண்மை நிலையாகும். அவரது மரணம் பற்றி கிறிஸ்தவர்களின் கருத்து உண்மையானதல்ல. மேலும் வரலாற்று சான்றுகளுக்கும், பகுத்தறிவிற்கும் புறம்பானதாகும். அவர்கள் உண்மையிலேயே இயேசு சிலுவையில் மரித்து 3 ஆம் நாள் பரலோகத்திற்கு ஏறிச் சென்றார் என்று நம்புகின்றனர். எப்பேர்ப்பட்ட முரண்பாடு! எப்பேர்ப்பட்ட கட்டுக்கதை! பாருங்கள். தற்கால நவீன கிறிஸ்தவம் இயேசு சிலுவையில் மரணித்தார் என்ற நம்பிக்கையின் மீது அமைந்திருக்கின்றது. எனினும், இயேசு சிலுவையில் மரணமடையவில்லை என்றும், அவர் மரணித்த பின் மீண்டும் எழவில்லை என்றும் நிரூபிக்கப்பட்டால், கிறிஸ்துவம் என்ற பிரமாண்ட மாளிகை நொறுங்கி தரை மட்டம் ஆகிவிடுகிறது.

தற்கால கிறிஸ்தவத்தின் தோற்றுனராகத் திகழும் பவுல்

கூறுகின்றார்:

"கிறிஸ்து எழுந்திருக்கவில்லை என்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விவசாயமும் விருதா." *(1 கொரிந்தியர் 15:14)*

பிரபல அமெரிக்க பிரச்சாரகர், காலம் சென்ற டாக்டர் ஷுமர் கூறுகின்றார்:

இயேசு சிலுவையில் மரணித்தார் என்ற நமது நம்பிக்கை தவறு என்றால் பின்னர் இந்த முழு கிறிஸ்தவமும் கேலிக்குரியதாக ஆகிவிடும்.

## *1. யோனாவின் அடையாளம்*

இயேசு சிலுவையில் உயிர் துறக்கவில்லை என்று நிரூபிப்பதற்கு, நமது வாதங்களை வேதாகமத்திலிருந்தே எடுத்துக் காட்டுகின்றோம்.

**புதிய ஏற்பாட்டில் நாம் படிப்பதாவது:**

"ஜனங்கள் திரளாய் கூடி வந்திருக்கின்றபோது அவர் இந்த சந்ததியார் பொல்லாதவர்களாய் இருக்கின்றார்கள். அடையாளத்தைத் தேடுகின்றார்கள், ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. யோனா நினிவே பட்டணத்தாருக்கு அடையாளமாய இருந்தது போல, மனுஷ குமாரனும் இந்த சந்ததிக்கு அடையாளமாயிருப்பார்." *(லூக்கா 11:29,30)*

"அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக, இந்த பொல்லாத விபச்சார சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள், ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷ குமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்." *(மத்தேயு: 12:39,40)*

இதில் இயேசு தமக்கு ஏற்பட்ட நிலையை யோனா தீர்க்கதரிசியின் நிலையுடன் ஒப்பிடுகிறார். நினிவே பட்டணத்தாருக்கு யோனா காட்டிய அடையாளத்தைப் பற்றி பைபில் இவ்வாறு கூறுகிறது:

"யோனாவை விழுங்கும் படி ஒரு பெரிய மீனை கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார். அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான்."

அந்த மீனின் வயிற்றிலிருந்து யோனா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன். அவன் எனக்கு உத்தரவு அருளினார். நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன். நீர் என் சத்தத்தைக் கேட்டீர்." *(யோனா 1: 17, 2:1-2)*

இவ்வசனத்தின்படி, யோனா ஒரு பெரிய மீனால் விழுங்கப்பட்டார். அதில் அவர் மூன்று பகலும், மூன்று இரவும், தங்கி இருந்தார். பின்னர் அவர் அதன் வயிற்றிலிருந்து உயிருடன் வெளி வந்தார். இதுவே நினிவே பட்டணத்தாருக்கு கொடுக்கப்பட்ட அடையாளமாகும். மீனின் வயிற்றிலிருந்த யோனா இறைவனிடம் தனது விடுதலைக்காக வேண்டினார். இறைவன் அவருடைய வேண்டுதலை ஏற்றுக் கொண்டான். அதனால் உயிருடன் வெளிவந்தார்.

இயேசு, தமது காலத்திலுள்ள இந்த கெட்ட விபச்சார சந்ததிகளுக்கு யோனா தீர்க்கதரிசியின் அடையாளம் தவிர வேறு அடையாளங்கள் கொடுக்கப்கடமாட்டாது எனக் கூறுகிறார்.

இப்போது, யோனா- இயேசு இவர்களுக்கிடையிலுள்ள அடையாளங்களின் ஒற்றுமைகள் என்ன என்பதை காண்போம்.

யோனா மீனின் வயிற்றினுள் உயிருடன் சென்றது போல, இயேசு பூமியின் இருதயத்தில் உயிருடன் செல்ல வேண்டும், மீண்டும் அவர் உயிருடன் வெளிவர வேண்டும் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.

யோனா, இயேசு இருவரும் தங்களுக்கு ஏற்பட்ட வருத்தத்தின் நிமித்தம் அங்கலாய்ப்பு உள்ளாகி தம் இறைவனிடம் அதிலிருந்து வெளிக் கொணறும்படி வேண்டினர். இருவரது வேண்டுதல்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இயேசு பூமியின் இருதயத்தில் உயிருடன் செல்லவில்லை என்றால், உயிருடன் வெளிவரவில்லை என்றால் இரண்டு அடையாளங்களுக்கும் இடையில் ஒற்றுமை எங்கு இருக்கின்றது?

இயேசு தம் காலத்து சமுதாயத்தினருக்கு ஒரே ஓர் அடையாளத்தைத்தான் காட்டுவதாக வாக்களித்தார், அந்த

அடையாளத்தைத்தான் காட்டுவதாக வாக்களித்தார், அந்த அடையாளமும் உண்மையாக இல்லாமல் போனால், அவர் தீர்க்கதரிசி என்ற உண்மைக்கு ஆதாரமாக வேறென்ன அத்தாட்சிகள் உள்ளன?

இயேசு யோனாவின் அடையாளத்தை கோடிட்டுக் காட்டியதன் நோக்கம் அவர் சிலுவையில் மரணிக்க மாட்டார் என்பதற்குத் தான்.

எனவே, ஆழ்ந்த மயக்கத்திலிருந்தார் என்ற கோட்பாடு எவ்வகையிலும் தவறான யூகமல்ல.

## 2.பிலாத்துவின் மனைவி கண்ட கனவு

'அவன் (பிலாத்து) நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி, நீர் அந்த நீதிமானை (இயேசுவை) ஒன்றும் செய்ய வேண்டாம். அவர் நிமித்தம் இன்றைக்கு சொப்பணத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள்.' (மத்தேயு : *27:19*)

பிலாத்துவின் மனைவி கண்ட கனவு உண்மையானதும், தக்க சமயத்தில் காண்பிக்கப்பட்டதுமாக உள்ளது. இதன் உட்கருத்து யாதெனில், இயேசு சபிக்கப்பட்ட சிலுவை மரணத்திலிருந்தும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதாகும். இறைவன் தனக்கு நெருக்கமானவர்களை வேறொருவர் கண்ட கனவின் மூலமாக காப்பாற்றுகின்றான்.

உதாரணமாக யோசேப்பு, பாரோனின் இரு கனவுகளுக்கு விளக்கம் கொடுத்ததால் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். இறைவன் இயேசுவை அவரின் எதிரிகளிடமிருந்து காப்பாற்ற விரும்பியதால் ரோமானிய ஆளுநரின் மனைவி கண்ட இச்சொப்பணம் சாதகமான தீர்ப்பை அவர் அளிக்க ஏதுவாயிற்று.

## 3. ரோமானிய ஆளுநரின் இரக்க சிந்தை

யூதர்கள் இயேசுவின் வழக்கை பாலஸ்தீனத்திலுள்ள ரோமானிய ஆளுநர் பிலாத்துவிடம் கொண்டு சென்றனர். அவர் அந்த வழக்கை சட்டப்படி விசாரித்து, அவருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளிலிருந்தும் அவர் குற்றமற்றவர் என முடிவு செய்தார்.

**அவர் கூறினார்:**

'ஜனங்களை கலகத்திற்கு தூண்டி விடுகின்றவனாக இந்த

மனுஷனை என்னிடத்தில் கொண்டு வந்தீர்கள். நான் உங்களுக்கு முன்பாக விசாரித்த போது, இவன் மேல் நீங்கள் சாட்டுகின்ற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை.' (லூக்கா *23:14*)

'மறுபடியும் அவன் யூதர்களிடத்தில் வெளியே வந்து, நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன். பஸ்கா பண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலை பண்ணுகிற வழக்கம் உண்டே, ஆகையால், யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலை பண்ண உங்களுக்கு மனதுண்டா? என்றான். அப்போது அவர்களெல்லாரும் இவனை அல்ல, பரபாசை விடுதலை பண்ண வேண்டும் என்று மறுபடியும் சத்தமிட்டார்கள். அந்த பரபாஸ் என்பவன் கள்ளனாயிருந்தான்.' (யோவான் *18:38-40*)

'அது முதல் பிலாத்து அவரை விடுதலை பண்ண வகை தேடினான். யூதர்கள் அவனை நோக்கி இவனை விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்கு சிநேகிதனல்ல. தன்னை ராஜா என்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என சத்தமிட்டார்கள்.' (யோவான் *19:12*)

இவ்வசனங்களின்படி யூதர்கள் இயேசு மீது சுமத்திய குற்றச்சாட்டுகளை விட்டும் அவர் களங்கமற்றவர் என்று ஆளுநர் கருதினார் எனத் தெரிகிறது. அவர் தம்மால் இயன்ற அனைத்து வழிகளிலும் அவரை விடுதலை செய்ய முயற்சி செய்தார். ஆனால் யூதர்கள் ரோமிலுள்ள சீஸரிடம் முறையிடப் போவதாக பயமுறுத்தியதால் அவர் அவர்களுக்கு இணங்கி இயேசுவை அவர்களிடமே ஒப்படைத்தார். ஆனாலும் இரகசியமாக இயேசு காப்பாற்றப்பட எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இதற்கு ஆளுநரின் மனைவி முன்பு கண்ட கனவும் ஒரு காரணமாகும். மேலும் தலைமை குருக்கள் ஆளுநர் மீது கொண்ட பொறாமையின் காரணமாக செய்த சூழ்ச்சியே என்பதையும் ஆளுநர் நன்கு தெரிந்திருந்தார்.

## 4. இயேசுவை காப்பாற்ற பிலாத்து மேற்கொண்ட முயற்சிகள்

ஆளுநர் பிலாத்து, இயேசு கிறிஸ்து குற்றமற்றவர் என்று நன்றாக அறிந்திருந்தார். அதனால் அவர் இயேசுவின் உயிரைக் காப்பாற்ற ஒரு திட்டம் வகுத்தார். ரோமானிய பேரரசின் பொறுப்புள்ள அதிகாரியாக இருந்த அவரால், வெளிப்படையாக முன்வந்து முயற்சிகளை மேற்கொள்ள இயலவில்லை.

தொடர்ச்சி பக்கம்: 14......

# ஈஸா நபியின் கல்லறை (கப்ரிஸ்தானம்)







மர்யமின் மகன் ஈஸா (ஈஸா நபி - இயேசு கிறிஸ்து) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்றே திருக்குர்ஆன் ஆணித்தரமாக எடுத்துக் கூறுகின்றது. நபிகள் கோமான் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்களும் ஈஸா நபி (அலை) அவர்கள் மரணித்து விட்டதாக ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் (இயேசு கிறிஸ்து) சிலுவை சம்பவத்திற்குப் பிறகு தனது காணாமல் போன கோத்திரத்தாரை தேடி அலைந்தவாறு பலஸ்தீனிலிருந்து ஆப்கானிஸ்தான் வழியாக இந்தியா வந்தடைந்து தனது இறுதி காலம் வரை வாழ்ந்துள்ளார்கள். சுமார் 120 வயது வரை வாழ்ந்து மரணித்து விட்ட அன்னாரின் கல்லறை (கப்ரிஸ்தானம்) இந்தியாவில் உள்ள கஷ்மீர் மாநிலத்தில், ஸ்ரீ நகர் எனும் நகரில் கான்யார் வீதியில் அமைந்துள்ளது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், ஈஸா நபியின் ஜனாஸா யூத பாரம்பரியத்தின் படி அடக்கம் செய்யப்பட்டது. பொதுவாக முஸ்லிம்கள் அடக்கம் செய்யும் விதத்தில் அடக்கம் செய்யப்படவில்லை. இது தொடர்பான படங்களையே நீங்கள் மேலே காண்கின்றீர்கள். இன்றும் கூட பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் இதனைக் காண்பதற்காக கஷ்மீர் செல்கின்றனர் என்பது ஊடகங்களில் வெளிவரும் செய்தி. எனவே மரணித்தவர் மீண்டும் வரப்போவதே இல்லை.

# MTA - முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா (25 ஆண்டுகள் நிறைவு)



கடந்த மே 15 - 2017 அன்று MTA முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யாவின் 24 மணி நேர ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கும் முகமாக ஒரு சிறப்பு நிகழ்ச்சி இலண்டன் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல் கேட்போர் அரங்கில் இடம்பெற்றது. சிறப்புரை நிகழ்த்திய அஹ்மதிய்யா கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள், 'நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன்' என்று இமாம் மஹ்தி ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுக்கு கிடைக்கப் பெற்ற இறை வாக்குறுதி நிறைவேறியதன் ஒரு அங்கமாக, முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா திகழ்வதாக குறிப்பிட்டார்கள். தொடர்ந்து உரையாற்றிய அஹ்மதிய்யா கலீஃபா




அவர்கள், இத்தொலைக்காட்சியை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கு பாரிய பணத் தேவை இருப்பினும் அல்லாஹ்வின் தனிப்பட்ட அருளின் காரணமாக அவனே, இச்சேவையை தொடர்வதற்காக பல்வேறு வளங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றான் என்றும், அதுமட்டுமின்றி ஏராளமான அஹ்மதிகள் இதற்காக அளப்பரிய தியாகங்களை பல்வேறு வழிகளில் செய்து வருவதாகவும் குறிப்பிட்டார்கள்.

# திருக்குர்ஆன் அன்பளிப்பு தொடர்ந்த வண்ணம். அவற்றுள் சில ....

மத்திய (கண்டி மாநகரம் ) மாகாண ஆளுநருக்கு



மத்திய மாகாண (கண்டி மாநகரம் ) முதல்வருக்கு











# கிலா஁ஃ.பத் தின நிகழ்வுகள் (கொழும்பில்)











**சமாதானப் பேரவை - பெங்களூர்**






உலகில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்திட திருக்குர்ஆன் கூறும் உயரிய போதனைகளை மாற்று மதத்தவர்களும் அறியும் விதத்தில் சமாதானப் பேரவை நிகழ்வுகளை (Peace Symposium) உலகில் பல்வேறு நாடுகளில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நடத்தி வருகின்றது. இந்த வரிசையில் இந்தியா பெங்களூர் நகரத்தில் இவ்வருட துவக்கத்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தினால் சமாதானப் பேரவை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பேரவையில் கர்நாடக மாநில ஆளுநர் ஸ்ரீ வாஜுபாய் ருதபாய் வாலா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுவதையும் பௌத்த மத பிரதிநிதியாக கலந்து கொண்ட இந்திய மகாபோதி சங்கத்தின் தலைவர் மதகுரு அஸ்ஸப்பா மகாதேர உரையாற்றுவதையும் நீங்கள் படங்களில் காணலாம்.

தொடர்ச்சி பக்கம்: 09......
எனினும் அவர் இந்த முழுத் திட்டத்தையும் திறமையாகக் கையாண்டு செயலாற்றும் நாடகத்தில், முக்கிய கதா பாத்திரமாக விளங்கினார். இந்த காட்சியில் பிற பாத்திரங்கள், அதிமேத்தியாவை சார்ந்த யோசேப்பு ஒரு கௌரவ ஆலோசகராகவும், இயேசுவின் சீடராகவும் இருந்தார். அவருக்கு ஏற்கெனவே பாறையில் வெட்டப்பட்ட ஒரு கல்லறை அருகில் இருந்தது. மற்றொரு பாத்திரமாகத் திகழ்பவர் நசிக்கொதேமு என்னும் யூத கல்விமான், இவர் எல்லா விஷயங்களிலும், அந்தரங்க சாட்சியாக இருந்தார்.

'ஆரம்பத்திலேயே, ஒரு இராத்திரியில் இயேசுவிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் வெள்ளைப் போளமும், கரிய போளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டு வந்தான்.' (யோவான் *19: 39*)

பிலாத்து சாமர்த்தியமாக இயேசுவை சிலுவையில் அறைய வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளையை தேர்ந்தெடுத்ததால் இயேசுவை சூரிய அஸ்தமனமான பின் சிலுவையில் அப்படியே விட்டு வைக்க முடியாமல் போயிற்று. அடுத்த நாள் சபத் தினமாக இருந்தது, அது யூதர்களின் புனித நாளாகும். அவர் தனது திட்டத்தை நிறைவேற்ற நம்பிக்கைக்குரிய நண்பர்களான யோசேப்பு மற்றும் நிக்கொதேமு ஆகியோரை தேர்ந்தெடுத்தார். இயேசுவுக்கு நினைவாற்றல் திரும்பத் தேவையான எல்லாத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வாறில்லையென்றால், நிக்கொதேமு எதற்காக கரிய போளமும், வெள்ளைப் போளமும் கலந்து கொண்டு வர வேண்டும்? யூதர்களையும் ரோமானிய பேரரசையும் திருப்திப்படுத்த, இயேசு இறந்து விட்டதாக அரசு ஆவணங்களில் சித்தரிக்கப்பட்டார். அரிமெத்தியாவை சார்ந்த யோசேப்பு தைரியமாக இயேசுவின் உடலை ஒப்படைக்குமாறு ஆளுநரிடம் கேட்க, உடனே ஆளுநர் அவ்வேண்டுகோளை நிறைவேற்றினார். இச்செயல் முன்பே திட்டமிடப்படாமல் இருந்திருந்தால், எவ்வாறு ஆளுநர் இயேசுவின் உடலை ஒரு அந்நியரிடம் ஒப்படைத்திருப்பார்?

இத்திட்டத்தைப் பற்றி இயேசுவுக்கு முன்பே தெரிவிக்கப்பட்டிருந்தது என்று நம்பக் காரணமாயிருந்தது.

எவ்வாறு யோனா மூன்று பகலும், மூன்று இரவும் திமிங்கிலத்தின் வயிற்றில் இருந்தாரோ, அதே போல மனித குமாரனும் மூன்று பகலும், மூன்று இரவும் பூமியின் இருதயத்தில் இருப்பார் என்ற

அவருடைய முன்னறிவிப்பு உண்மையாக வேண்டும் என்பதற்காக இயேசு, நிக்கொதேமு இவர்களுக்கிடையில் முந்தின நாள் இரவு நிகழ்ந்த சந்திப்பு இத்திட்டம் முழுவதையும் தெளிவாக்குகிறது.

## 5. சிலுவையில் அறையப்பட்டிருந்த நேரம்

இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்த நேரம் அவருக்கு மரணத்தை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு நீண்டதாக இருக்கவில்லை. பொதுவாக குற்றவாளிகளுக்கு சிலுவை மரணம் ஏற்படுவதற்கு அதிக நாட்கள் ஆகும். சிலுவையில் ஏற்படும் மரணம் காலதாமதமாகவும், கைகள் கால்களில் உண்டான காயத்திலிருந்து வெளியான இரத்த இழப்பு, உடல் சோர்ந்து போதல், வேதனை, கடும் பசி, தாகம் ஆகியவற்றாலும் ஏற்படும். இம்மரணம் ஏற்பட குறைந்தபட்ச கால அளவு 24 முதல் 28 மணி நேரமாகும். எனினும் சில பொழுது மரணம் ஏற்பட பல நாட்கள் ஆகும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் குற்றவாளிகளின் கால்கள் முறிக்கப்படும். அப்போது உள் இரத்தக் கசிவின் காரணமாக மரணம் விரைவில் ஏற்படும். சிலுவை சம்பவம் பற்றி மேலும் ஆய்வு செய்யும் போது இயேசு மிகக் குறைந்த நேரமே சிலுவையில் அறையப்பட்டிருந்ததாக தெரிகின்றது. அவர் சிலுவையில் தொங்கிய நேரம் மூன்று அல்லது நான்கு மணி நேரத்தை விட அதிகமல்ல. இயேசு 33 வயது வாலிபராக இருக்கின்ற நிலையிலும், அவர் இக்குறைந்த காலகட்டத்தில் மரணமடைந்திருக்க முடியாது. அது மட்டுமல்ல, அவரது கால்கள், அதே நாளில் சிலுவையில் அறையப்பட்ட மற்ற இரண்டு கள்ளர்களின் கால்கள் முறிக்கப்பட்டது போல் முறிக்கப்படவில்லை.

ரோமானிய காலண்டரில் ஒரு நாள் என்பது சூரிய உதயத்திலிருந்து தொடங்கி அது அஸ்தமிக்கும் போது முடிவுக்கு வருகின்றது. இத்தகைய நடைமுறையே இன்று அரபு நாடுகளிலும் கடைபிடிக்கப்படுகிறது.

யோவானின் 19:14 கூற்றுப்படி பிலாத்து கடைசியாக யூதர்களிடம் இயேசுவை சிலுவையில் அறைவது பற்றி பேசியது வெள்ளிக்கிழமையின் 6-ஆவது மணி நேரமாக இருந்தது. பின் அவரை அவர்களிடம் ஒப்படைத்தார்.

'ஆறாம் மணி நேர முதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒன்பதாம் மணி நேரத்திலே, இயேசு: ஏலோயி! ஏலோயி! லாமா சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன்

என்னைக் கைவிட்டீர்? என்று அர்த்தமாம்.' (மார்க்கு *15:33,34*)

இதிலிருந்து இயேசு அந்நாளின் 9-ஆவது மணி நேரம் வரை தம் முழு உணர்வோடு இருந்தார் என்றும், அதன் பின்பே அவர் நினைவாற்றலை இழந்து மயக்கமுற்றார் என்றும் தெரிகின்றது. இதனைத் தான் புதிய ஏற்பாட்டை எழுதியவர்கள் இயேசு ஆவியை விட்டார் என்று குறிப்பிடுகின்றனர்.

இதை எழுதிய எவரும் கண்ணால் கண்ட சாட்சியாக அவ்விடத்தில் இருக்கவில்லை. ஆழ்ந்த மயக்கம் என்பது உயிரை விட்டதாக எடுத்துக் கொள்ளப்பட்டது. சிலுவையில் உயிரை விடுவது என்பது சாபத்திற்குரிய மரணம். பைபிளில் நாம் படிப்பது, தூக்கிப் போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன் என்பதாகும். (உபாகமம் *21:23*) கிறிஸ்தவர்களுக்கு எப்படிப்பட்ட அசட்டுத்துணிச்சல் இருந்தால் ஓர் உண்மையான இறைத்தூதரை, இறை சாபத்திற்கு உள்ளானவர் என்று கூறுவர்?

## 6. இரத்தமும் தண்ணீரும்

'அந்தப்படி போர்ச் சேவகர் வந்து அவருடனே கூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து அவர் மறித்து இருக்கிறதைக் கண்டு அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. ஆகிலும் போர்ச்சேவகர்களில் ஒருவன் ஈட்டியினால் அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது.' (யோவான் *19:32-34*)

போர்ச் சேவகர்கள் இயேசுவின் கால்களை முறிக்கவில்லை. ஏனெனில் அவர் இறந்து போனதாக அவர்கள் கருதினர். ஆனால் உண்மையில் அவர் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தார். அல்லது கோபமுற்ற யூதர்களை அமைதிப்படுத்த அவர் இறந்து போனதாக பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆனால் ஒரு போர்ச் சேவகர் அவருடைய விலாவில் ஈட்டியால் குத்தினார். உடனே இரத்தமும் தண்ணீரும் பீறிட்டது. இது உயிர் இன்னும் உள்ளது என்பதற்கான ஆணித்தரமான சான்று. இறந்த உடலின் இருதய செயல்பாடு நின்றுவிடுவதன் காரணமாக அதிலிருந்து இரத்தமும் நீரும் பீறிட்டு வராது. அறிவுடன் சிந்தித்துப் பார்ப்பவருக்கு இதில் மாபெரும் அடையாளம் உள்ளது.

## 7. கண்ணால் கண்ட சாட்சிகள் ஏதுமில்லை

சுவிசேஷத்தை எழுதிய மூவர் 6- இலிருந்து 9ம் மணிவரை பூமியில் எங்கும் இருள் பரவி இருந்ததாகவும், பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாகவும், பாறைகள் பிளந்ததாகவும், ஆலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்ததாகவும் எழுதியுள்ளார்கள்.

மாபெரும் புழுதிப் புயலுடன் பூகம்பம் ஏற்படும் போது மக்கள் தம் இல்லம் செல்ல அவசரமாக முயல்வார்களே தவிர, எங்கும் வேடிக்கை பார்ப்பதற்காக நேரத்தை செலவிட மாட்டார்கள் என்பது சாதாரண நடைமுறை விஷயமாகும். இப்போது சற்றே சிந்தனை செய்து பாருங்கள். இயேசு உண்மையிலேயே சிலுவையில் மரித்தார் என்று கதை கட்டும் அளவுக்கு யார் அங்கு கண்ட சாட்சியாக விளங்கினார்? எந்த யூதராவது அங்கு இருந்திருந்தால், புயல் ஏற்படுவதையும், பூமி அதிர்ச்சிக்குள்ளாவதையும் கண்டு அஞ்சி வீட்டுக்கு ஓடியிருப்பார். சீடர்களைப் பொருத்தவரைக்கும் ஏற்கெனவே அவர்கள் சிலுவை சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஓடி விட்டனர்.

'அதற்கு அவன் நீங்கள் சொல்லுகிற மனுஷனை (இயேசுவை) அறியேன் என்று சொல்லி சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான்.' (மாற்கு 14:71)

'அப்பொழுது எல்லாரும் அவரை விட்டு ஓடிப் போனார்கள்." (மாற்கு 14:50)

சுருக்கமாக இயேசு ஆவியை ஒப்புவித்தார் என்று கூற கண்ணால் கண்ட ஒரு சாட்சி கூட சம்பவ இடத்தில் இல்லை. இவை யாவும் வெறும் யூகமும், வீண் கற்பனையுமே ஆகும்.

## 8. காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் கோத்திரத்தாரைத் தேடி இயேசு புறப்படல்

1- 'இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்.' (லூக்கா 19:10)

2- இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும். அவைகள் என் சத்தத்திற்கு செவிகொடுக்கும். அப்போது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.' (யோவான் 10:16)

3- 'அவர் அவர்களை நோக்கி நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து பிரசங்கிக்க வேண்டும் இதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார்.' (லூக்கா 4:43)

4- 'அதற்கு அவர், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றபடியல்ல என்றார்.' (மத்தேயு 15:24)

இவ்வசனங்களிலிருந்து தெரியும் உண்மை யாதெனில் இயேசுவின் வருகையின் நோக்கம் இஸ்ரவேலின் 12 கோத்திரத்திற்கும் தம் செய்தியைத் தெரிவிப்பதே ஆகும். அவர்கள் இயேசுவின் வருகையின் போது கிழக்கத்திய நாடுகளில் பலஸ்தீனத்திலிருந்து இந்தியா வரை சிதருண்டு கிடந்தார். 12 கோத்திரத்தவருள் 2 கோத்திரத்தார் மட்டுமே அப்போது பலஸ்தீனத்தில் இருந்தனர். மற்ற 10 கோத்திரத்தாரும் பலஸ்தீனத்திலிருந்து இந்தியா வரை உள்ள நிலப்பகுதியில் பரவிப் போய் இருந்தனர். இயேசு மற்ற 10 கோத்திரத்தையும் அழைத்து தம் தூதுச் செய்தியை எட்டச் செய்யவில்லை என்றால் அவர் தமது வருகையின் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினார் என்று கூற முடியாமல் போயிருக்கும். இயேசு, சொற்ப வயதில் (33 வயதில்) உயிர் துறந்து விட்டார் என்ற யூகம் எந்த நோக்கத்திற்காக அவர் அனுப்பப்பட்டாரோ அதன் மீது விழுந்த மாபெரும் அடியாகும்.

ஆனால் உண்மை யாதெனில், இயேசு சிலுவை மரணத்திலிருந்து தப்பி காணாமற் போன தம் ஆடுகளைத் தேடி கிழக்கத்திய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றார். வரலாற்றுச் சான்றுகள், தொல்பொருள் ஆராய்ச்சியின் நவீன கண்டுபிடிப்புகள் இதற்கு சாதகமாகத் திகழ்கின்றன. இயேசு காணாமற் போன தம் ஆடுகளை பெர்ஷியா, ஆப்கானிஸ்தான், காஷ்மீர் ஆகிய இடங்களில் கண்டு போதனை செய்தார்கள். இன்னும் குறிப்பாகக் கூறுவதென்றால், அவருக்கு பலஸ்தீனத்தை விட இங்கு அதிக வெற்றி கிடைத்தது. அவர் இயற்கை மரணமடைந்து, காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகரில் அடக்கம் செய்யப்பட்டார்.

## 9. தம் எதிரிகளை இயேசு வெற்றி கொள்ளுதல்

இயேசு தம் சீடர்களிடம் இவ்வாறு கூறினார்:

'இதோ நீங்கள் சிதறுண்டு அவனவன் தன் தன் இடத்திற்குப் போய் என்னைத் தனியாக விட்டுவிடும் காலம் வரும். அது

இப்பொழுது வந்திருக்கிறது. ஆனாலும், நான் தனித்திரேன். பிதா என்னுடனே கூட இருக்கிறார். என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.' (யோவான் 16: 32,33)

இயேசுவின் வெற்றி எதில் இருக்கின்றது என்று பார்ப்போம். அவர் சிலுவையில் உயிரை விட்டதனாலா? அல்லது சிலுவை மரணத்திலிருந்தும் அவர் தப்பியதனாலா? அவர் சிலுவையில் மரித்திருந்தால் யூதர்கள் வெற்றியடைந்தவர்களாக இருந்திருப்பார்கள். ஏனெனில் அவர்களின் முக்கிய நோக்கமே இயேசு தம்மை மசாயா என்று அழைப்பதில் அவர் பொய்யர் என நிரூபிப்பதேயாகும். இக்கொள்கைக்கு பக்கபலமாக அவர்களுக்கு இருக்கும் வேத வசனம் மொழிவதாவது:

'........தூக்கிப் போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன் ஆவான்.' (உபாகமம் 21:23)

ஆனால் அவர் சிலுவையில் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்து உயிருடன் வெளிக் கொணரப்பட்டார். அவர் பூமியின் இருதயத்தில் உயிருடன் நுழைந்தார். உயிருடனே வெளிவந்தார் என்றால், அவர் உண்மையிலேயே தமது எதிரிகளை வெற்றி கொண்டிருக்கிறார். அவர்களின் தீய எண்ணங்கள் அனைத்தையும் முறியடித்தார் என உறுதி கொள்ளலாம்.

இயேசு கூறுகின்றார்:

'யோனா நினிவே பட்டனத்தாருக்கு அடையாளமாயிருந்தது போல மனுஷ குமாரனும் இந்த சந்ததிக்கு அடையாளமாயிருப்பார்.' (லூக்கா 11:30)

வேறு விதமாகக் கூறுவதென்றால் எவ்வாறு யோனா தீர்க்கதரிசியை மீன் வயிற்றிலிருந்து இறைவன் காப்பாற்றினானோ அவ்வாறு இந்த கெட்ட மரணத்திலிருந்தும் சர்வ சக்தி படைத்த இறைவன் தம்மைக் காப்பாற்றுவான் என யூதர்களை நோக்கி இயேசு கூறினார். இவ்விரு உதாரணங்களுக்கிடையில் உண்மையில் ஒற்றுமை உண்டு எனக் கூற முடியும் என்றால் இயேசு பூமியின் இருதயத்தில் உயிருடன் நுழைந்து உயிருடன் வெளிவர வேண்டுமல்லவா?

## 10. அவரது பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டது

பைபிள் கூறுவதாவது: இறைவன் தனது நல்லடியாரின் பிரார்த்தனைகளைக் கேட்டு, அவர்களை கஷ்டங்களிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் பாதுகாக்கின்றான்.

புதிய ஏற்பாடு இவ்வாறு மொழிகின்றது:

'......நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுல்லதாயிருக்கின்றது. எலியா என்பவன் நம்மைப் போல பாடுள்ள மனுஷனாயிருந்தும் மழை பெய்யாதபடிக்கு கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருடமும் ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம் பண்ணினான். அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது. பூமி தன் பலனைத் தந்தது.' *(யாக்கோபு 5: 16-18)*

'......இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து பிதாவே, நீர் எனக்கு செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்கு செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்குறேன். ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும் படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்.' *(யோவான் 11: 41,42)*

'அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும், இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப் போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது.' *(மாற்கு 14:36)*

இவற்றிலிருந்து தெரியவருவது என்னவென்றால், இயேசு சிலுவை மரணத்திற்கு மிகவும் அஞ்சினார். எனவே அவர் இந்த கசப்பான மரண பாத்திரம் தன்னிடமிருந்து அகற்றப்பட வேண்டும் என்று மிகவும் பணிவாக வேண்டினார். இயேசு தாழ்மையுடனும், உருக்கத்தோடும் தம் பிதாவிடம் தம்மை சாபத்திற்குரிய சிலுவை மரணத்திலிருந்தும் இரட்சிக்கும் படி பணிவுடன் வேண்டினார். உண்மை இவ்வாறு இருக்கின்ற போது அவர் சிலுவையில் மரணமடைந்திருந்தால் அவர் உலகை வெற்றி கொண்டார் என எப்படிக் கூற முடியும்? அவரது முழு வாழ்க்கையின் நோக்கமும் வீணாய் போயிருக்கும். அவருடைய இறைத் தீர்க்கதரிசி என்ற வாதத்தின் மீது தீயவர்கள் சவால் விட்டிருப்பார்கள். சிலுவையில் மரணம் என்ற நினைப்பை அவரால் சிறிதும் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது.

உண்மை இறை தீர்க்கதரிசியான அவர் மரணத்திற்கு அஞ்சவில்லை. அதே வேளை நிச்சயமாக அவர் சிலுவை மரணத்திற்கு மிகவும் அஞ்சினார். ஏனென்றால் சிலுவை மரணம் என்பது சாபத்திற்குரிய மரணமாக ஆகிவிடும். அது அவருடைய தூதுச் செய்தியை எட்டவைக்கும் தூய பணிக்கு தடையாக அமைந்து விடும்.

'அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு.' (எபிரேயர் 5:7)

அதனால் அவரது உளப்பூர்வமான வேண்டுகோள் சந்தேகத்திற்கிடமின்றி இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என உறுதியாக நம்ப முடியும். அதன் பயனாக அவர் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் சிலுவையிலிருந்து உயிர் தப்பி, காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் கூட்டத்தாரை கிழக்கத்திய நாடுகளில் கண்டு தம் தூதுச் செய்தியை எட்டச் செய்யும் வரை வாழ்ந்தார்கள்.

அவர் அவர்களை நோக்கி 'நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து பிரசங்கிக்க வேண்டும். இதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார்.' (லூக்கா 4: 43)

அன்பார்ந்த மக்களே! இந்த சான்றுகள் இயேசு சிலுவையில் தம் உயிரை விட்டார் என்ற கொள்கை பைபிளின் அடிப்படையில் கூட தவறானவையே என்பதைத் தெளிவாக நிரூபித்துக் காட்டுகின்றன. எனவே இந்தத் தவறன கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இன்றைய கிறிஸ்தவ மார்க்கத்தின் அடித்தளமே உறுதியற்றது என்பது தெளிவாகின்றது!

# மரியத்தின் மகன் ஈஸா (ஈஸா நபி) வானத்திலிருந்து வரப்போவதே இல்லை!!!

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் - இமாம் மஹ்தி (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:



மிகவும் விளக்கமாக, ஆணித்தரமாக மனதில் பதிய வைத்துக்கொள்ளுங்கள். எவரும் வானத்திலிருந்து இறங்கி இவ்வுலகிற்கு வரப்போவதில்லை. எதிர்பார்ப்பவர்களின் சந்ததியினரும் அவர்களது சந்ததியினரும் மரணித்து விடுவார்கள். ஆனால் அவர்களில் எவரும் மர்யமின் மகன் ஈஸா வானத்திலிருந்து இறங்கி வருவதை காணப் போவதில்லை. அதன்பிறகு அல்லாஹ் அவர்களை நிம்மதி இழக்கச் செய்து விடுவான். அந்த சமயத்தில் உலகத்திலிருந்து சிலுவையின் ஆதிக்கம் படிப்படியாக நழுவுவதைச் காணலாம். அதன் பிறகு ஒரு புதிய சகாப்தம், புதிய நிலை, உலகில் பெரும் மாற்றம் ஏற்பட்டுவிடும். அதன் பிறகும் மரியமின் மகன் ஈஸா வானத்திலிருந்து வரப் போவதில்லை. அக்கால மக்கள் தங்களுடைய அறிவு வளர்ச்சியால் இத்தகைய மூட நம்பிக்கைகளை வெறுப்புடன் நோக்குவார்கள். அந்த காலத்தில் மூன்று நூற்றாண்டுகள் முடிவு பெற்றிருக்காது. எவரெல்லாம் ஈஸாவின் வருகைக்காக காத்துக் கொண்டிருந்தார்களோ அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும், கிறிஸ்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தனது மூடநம்பிக்கையினால் நிராசையடைந்து, பரிதாபத்திற்குரிய நிலையில் வேறுவழியின்றி அக்கொள்கையை கைவிட்டு விடுவார்கள். ஒரு தலைமையின் கீழ் உலகம் இயங்கும். அதற்கு விதையிடவே நான் வந்திருக்கிறேன். அதற்கான பணிகளுக்காகவே எனது கரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்த விதைகள் வளர்ந்து பல்கிப் பெருகும். அவை பூக்களாக மலர்ந்து பழங்களை தரும். அதனை உலகில் எவராலும் தடுத்து நிறுத்திடமுடியாது. (தத்கிரதுஷ் ஷஹாததைன் பக்கம் 64-69)

திருக்குர்ஆனில் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு ஏற்பவும் (குர்ஆன்: 24:56) புனித நபிகளாரின் முன்னறிவிப்புக்கு ஏற்பவும் அல்லாஹ்வால் உருவாக்கப்பட்ட கிலாபத் எனும் ஆன்மீக தலைமைத்துவம், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் தோற்றுவிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் கடந்த 27.05.2008 அன்று நிறைவடைந்தது. இதனையொட்டி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய கலீபா (ஐந்தாவது கலீபதுல் மஸீஹ்) ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள் அனைத்துலகிலும் வாழும் அஹ்மதி முஸ்லிம்களிடம் வாங்கிய

## உறுதிமொழி

அஷ்ஹது அ(ன்)ல்லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரஸூலுஹு.

இன்று, (27,மே 2008) அஹ்மதிய்யா கிலாபத் நூறு ஆண்டு நிறைவு பெற்றதற்காக, நாம் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி என்னவென்றால் நாங்கள் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தைப் பரப்புவதற்காகவும், முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரை உலகின் எல்லைகள் வரை எட்ட வைப்பதற்காகவும் எங்கள் வாழ்க்கையின் கடைசி நொடிப் பொழுது வரை முயற்சி செய்து கொண்டிருப்போம். மேலும் இந்த புனிதமான கடமையை நிறைவேற்றுவதற்காக எப்பொழுதும் எங்கள் வாழ்க்கையை இறைவனுக்காகவும், அவனது தூதர் (ஸல்) அவர்களுக்காகவும் அர்ப்பணித்திருப்போம். மேலும் மாபெரும் தியாகங்களை செய்து மறுமைவரை உலகின் ஒவ்வொரு நாட்டிலும் இஸ்லாத்தின் கொடியை மேலோங்க வைப்போம். நாங்கள் கிலாபத் அமைப்பை பாதுகாப்பதற்கும் அதனை உறுதிப்படுத்துவதற்கும் இறுதி மூச்சுவரை முயற்சி செய்து கொண்டிருப்போம்.

அஹ்மதிய்யா கிலாபத் மறுமை வரை பாதுகாப்புடன் இருப்பதற்காகவும், மறுமை வரை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலம் இஸ்லாம் பரவிக் கொண்டிருப்பதற்காகவும், முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடி உலகின் எல்லாக் கொடிகளைவிட உயரமாகப் பறப்பதற்காகவும் கிலாபத்துடன் எப்பொழுதும் பற்றுள்ளவர்களாக இருக்குமாறும், அதன் அருள்களிலிருந்து பயன்பெறுமாறும் நாங்கள் எங்கள் சந்ததிகளுக்கும், சந்ததிகளின் சந்ததிகளுக்கும் அறிவுரை கூறிக் கொண்டிருப்போம் என்றும் நாங்கள் உறுதிமொழி கூறுகின்றோம்.

இறைவா நாங்கள் இந்த உறுதிமொழியை நிறைவேற்றும் நல்வாய்ப்பை நீ எங்களுக்கு வழங்குவாயாக!

அல்லாஹும்ம ஆமீன்! அல்லாஹும்ம ஆமீன்! அல்லாஹும்ம ஆமீன்!

## முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா இன்டர்நேஷனல் (MTA)

இஸ்லாமிய போதனைகளை மக்களுக்கு எடுத்துரைப்பதற்கும் உலகில் அமைதியை நிலைநாட்டவும், மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் உருவாக்கப்பட்ட தொலைக்காட்சிதான் முஸ்லிம் டெலிவிஷன் அஹ்மதிய்யா (MTA) எனும் செயற்கைக்கோள் ஒளிபரப்பு.

இந்த செயற்கைக்கோள் ஒளிபரப்பு 24 மணி நேரமும் தனது நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றது. திருக்குர்ஆன் விளக்கவுரை, நபிமொழிகள், திருக்குர்ஆன் வகுப்புக்கள், காலத்தின் கலீஃபா அவர்கள் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் ஆற்றும் ஜுமுஆ பேருரைகள், மார்க்க கேள்வி-பதில் நிகழ்ச்சிகள், மார்க்க அறிஞர்களின் சொற்பொழிவுகள் ஆகியவை முஸ்லிம் டெலிவிஷன் அஹ்மதிய்யாவில் ஒளிபரப்பப்படுகின்றன.

"அரேபியர்களுடன் சந்திப்பு" என்ற நிகழ்ச்சியும் MTA வில் ஒளிபரப்பப்படுகின்றது. இதில் அரேபியர்கள் கேட்கும் கேள்விகளுக்கு கலீஃபா அவர்கள் பதில் கூறுகின்றார்கள். இந்நிகழ்ச்சி அரபு நாடுகளில் பிரபலமாகி வருவதுடன் இதைப் பார்க்கும் அரேபியர்களின் எண்ணிக்கையும் ஆர்வமும் பெருகி வருகின்றது.

டிஷ் (Dish) என்டனா மூலமாக MTA நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Satellite | : | Asia Sat 7 | Position | : | 105.5 East |
| Frequency | : | 3760 mhz | MID Dish size | : | 1.8 metre |
| Polarisation | : | Horizontal | Symbol Rate | : | 2 6 0 0 0 |
| Mbps | | | | | |
| Fec | : | 7/8 | Vedio Pid | : | - |
| Main Audio Pid | : | Auto | | | |

மேலதிக விபரங்களுக்கு: www.alislam.org இணையதளத்தை பார்வையிடவும்.

Love FOR All
Hatred FOR None



மஸ்ஜிதுல் அன்வார் - காதியான்

அமைதி சமத்துவம் சுதந்திரம்

கண்ணியம் நன்றியுடைமை

Published by: Ahmadiyya Muslim Jama'at
619/4, Baseline road,
Colombo-09, Sri Lanka.
T.P : 0112687568

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வெளியீடு